# கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகள் - நாச்சிக்குடாக் கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**A. Paunanthie[1]and J.Rasanayagam [2]**

*[1]Kopay Teachers' College*
*[2] Department of education, University of Jaffna*
*nanthy@gmail.com*

***ஆய்வுச்சுருக்கம்***

*கல்வியென்பது ஒரு சமூகத்தின் அபிவிருத்தியில் முக்கியத்துவம் பெறுகின்றது. ஒரு நாட்டின் அபிவிருத்தியில் கல்வி என்பது முக்கியமான குறிகாட்டியாகக் கொள்ளப்படுகின்றது. அந்தவகையில் பல்லினச் சமுதாய மக்கள் கூடி வாழும் எமது நாட்டில் அனைவருக்கும் கற்றலில் சம உரிமையை வழங்கப்படுவது அவசியமாகின்றது. இதை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கம் கொள்கையளவில் பல முயற்சிகளை எடுத்துவருகின்ற போதிலும் அதன் இலக்கு அடையப்பட்டமை பற்றிப் பல விமர்சனங்கள் உள்ளன. எமது நாட்டில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் பலரது கற்றல் நிலைமைகளில் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றமை மறுக்க முடியாதது. 2009 இற்குப் பின்னர் வன்னிப் பிரதேசத்தில் மீள் குடியேறிய முஸ்லிம் மக்கள் தமது பிள்ளைகளின் கற்றல் நிலைமைகளை ஒழுங்கமைப்பதில் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக நாச்சிக்குடா பிரதேசத்திலேயே அவர்கள் செறிவாகக் குடியேறியுள்ளனர். அங்கு, கிளி/நாச்சிக்குடா முஸ்லிம் மகா வித்தியாலயம் உள்ளது. அது ஒன்றே கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள ஒரே முஸ்லிம் பாடசாலை. அங்கு 148 முஸ்லிம் பிள்ளைகள் கற்கின்றனர். இவர்களுக்கான கற்றல் சந்தர்ப்பங்களை வழங்குவதில் பெற்றோரும் பாடசாலைகளும் பல சவால்களை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகின்றது. பெற்றோரின் பொருளாதார நிலைமை, அவர்களின் தொழில், பாடசாலைகளின் பௌதிகவள நெருக்கடி, ஆசிரியர் பற்றாக்குறை, பெற்றோரும் பிள்ளைகளும் கற்றலில் காட்டும் ஆர்வம் போன்றன அவற்றுள் குறிப்பிடத்தக்கன. இந்த நிலைமைகளைச் சீர்செய்வதில் குறிப்பிட்ட தரப்பினர் எதிர்கொள்ளும் சவால்களும் பல உள்ளன. எனவே இந்த நிலைமை பற்றி ஆய்வுசெய்வது அவசியமாகின்றது. நாச்சிக்குடா கிராமத்தில் உள்ள பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளின் பேற்றோர் மற்றும் பாடசாலை ஆதிபர், ஆசிரியர் ஆகியோரை ஆய்வு மாதிரிகளாகக் கொண்டே இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. படைகொண்ட எழுமாற்று மாதிரி எடுத்தல் (Stratified Random sampling)மூலம் ஆய்வுக்கான மாதிரிகள் தெரிவுசெய்யப்படுகின்றன. கல்வி கற்கும் தரம், பொருளாதார நிலைமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்படுகின்றனர். பெற்றோர் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து வினாக்கொத்து மூலம் பெறப்படுகின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டே ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. மற்றும், அவதானிப்பு, நேர்காணல் போன்ற தரவுசேகரிப்புக் கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன. திரட்டப்பட்ட தகவல்கள் தரவுகளாக்கப்பட்டு கணினியின் உதவியுடன் வரைபுகள் மற்றும் அட்டவணைகள் மூலம் வியாக்கினமளிக்கப்படுகின்றன. இந்த ஆய்வு அளவைநிலை ஆய்வாக (Survey research) மேற்கொள்ளப்படுகின்றது.றுக்கான தீர்வுகளும் முன்வைக்கப்படுகின்றது. மாணவர்களின் ஒழுங்கான வரவின்மை, பெற்றோரின் அக்கறையின்மை, குடும்பங்களின் பொருளாதார நெருக்கடி, பாடசாலைகளின் வளப் பற்றாக்குறை, முஸ்லிம் ஆசிரியர்கள் இன்மை, பரிகாரக் கற்பித்தலுக்கான பொறிமுறையின்மை போன்ற பல காரணிகள் அப்பிள்ளைகளின் கற்றலில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது. ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் கற்பித்தல் பொறிமுறை மற்றும் பெற்றோரிடையேயான*

*விழிப்புணர்வு போன்றவற்றின் மூலம் இவை சீர்செய்யப்படுவது அவசியம் என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாக அமைகின்றது.*

***முதன்மைப் பதங்கள்:****கற்றல் நிலைமை, கிளிநொச்சி மாவட்டம், முஸ்லிம் பிள்ளைகள், கற்றல் சந்தர்ப்பங்கள்*

**ஆய்வு அறிமுகம்**

அறிவியல் என்பது அனைத்துத் துறைகளிலும் முதன்மைபெற்றுவருகின்ற இன்றைய உலகப் போக்கில் கல்வி என்பது ஒவ்வொரு மனிதனதும், பிள்ளையினதும் அடிப்படை உரிமையாகக் கொள்ளப்படுகின்றது. இன்று உலகளாவிய அடிப்படையில் அனைவருக்கும் கல்வி, வாழ்க்கை நீடித்த கல்வி, வளர்ந்தோர் கல்வி, உள்ளடக்கல் கல்வி போன்ற கோசங்கள் மேலோங்கிவருகின்றன. இவற்றை நடைமுறைப்படுத்துவதில் எமது நாடு கொள்கை வகுப்புக்களையும் பிரசாரங்களையும் மேற்கொண்டிருந்தாலும் அவை இதுவரை காத்திரமாக முன்னெடுக்கப்படவில்லையென்றே தோன்றுகின்றது. 'இசுறு பாடசாலைத்திட்டம்', 'ஆயிரம் பாடசாலைத்திட்டம்', 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைத்திட்டம்' என பாடசாலைகளில் பிள்ளைகளை உள்வாங்குவதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அவை அறிமுகமாகின்ற வேகத்திலேயே அடுத்த திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதைக் காணலாம். இலவசக் கல்வி, இலவச சீருடை, இலவச உணவு என்று இலங்கை அரசாங்கம் கல்வி கற்றலுக்கான ஊக்கல்கள் பலவற்றை வழங்கினாலும் இன்றும் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுவோர் உள்ளனர். பாடசாலைக்கு ஒழுங்கான வரவின்மையைக் கொண்டிருக்கின்ற பலர் உள்ளனர். உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னரும் இன்றும் அதன் பாதிப்புக்களை அனுபவிக்கின்ற பிள்ளைகள் பலர் உள்ளனர் அவற்றால் அவர்களது கற்றல் நிலைமைகள் பலவகையிலும் பாதிக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. பெற்றோருடைய அக்கறையின்மை, பாடசாலைகளுக்கிடையிலான வளங்கள் (பௌதிக,ஆசிரிய) பொருத்தமாகப் பகிரப்படாமை, வினைத்திறனான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறாமை, பிள்ளைகளின் கவனத்தைக் கலைக்கவல்ல தொழில்நுட்ப சாதனங்களின் (தொலைக்காட்சி, செல்லிடப்பேசி) பயன்பாட்டு அதிகரிப்பு என பல காரணிகள் இன்றும் பிள்ளைகளின் கல்வியில் பாமகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக 2015 இல் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பெறுபேற்றுப் பகுப்பாய்வை நோக்குகின்றபோது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடுகையில் பின்தங்கிய நிலையில் உள்ளமையை அவதானிக்கலாம். 25 மாவட்டங்களிலும் கிளிநொச்சி மாவட்டமே மேற்கூறப்பட்ட பெறுபேற்றினடிப்படயில் இறுதிநிலையில் உள்ளது என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும். இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு முஸ்லிம் பாடசாலையாக விளங்குகின்ற கிளி/நாச்சிக்குடா முஸ்லிம் பாடசாலையிலும் இப்பாதிப்பினை உணரமுடிகின்றது. நாச்சிக்குடா பாடசாலையில் 125 முஸ்லிம் பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். அவர்களின் கற்றல் அமைவு தாழ்நிலையிலேயே உள்ளது. அந்த முஸ்லிம் பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் நாச்சிக்குடா கிராமத்திலிருந்து அப்பாடசாலைக்கு வருகின்றனர். ஒரு சில முஸ்லிம் மாணவர்கள் மட்டுமே சற்றுத் தொலைவிலுள்ள கிளி/முழங்காவில் மத்திய கல்லூரிக்குச் செல்கின்றனர். இந்நிலையில் நாச்சிக்குடா கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் கற்றல் நிலைமைகள் பற்றி ஆய்வு செய்ய வேண்டிய தேவை எழுகின்றது.

**ஆய்வு முறை**

**ஆய்வு வினாக்கள்**

1. நாச்சிக்குடா கிராமப் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகள் எவ்வாறு உள்ளன?

2. நாச்சிக்கடா கிராமப் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?
3. மேலே குறிப்பிட்டப்பட்ட இந்தப் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு கையாளக்கூடிய உபாயங்கள் எவை?

ஆகிய வினாக்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

**ஆய்வுக்கான நியாயப்பாடு**

நாட்டின் கல்வி முன்னேற்றம் பற்றி கல்வியியலாளர்களும் அரசியல்வாதிகளும் பலவாறு பேசிக்கொண்டாலும் இன்றும் பின்தங்கிய பிரதேசங்கள் பலவற்றில் கல்விக்கான சமவாய்ப்புக்கள் எட்டப்படாத பிள்ளைகள் உள்ளனர் என்பது கசப்பான உண்மையாகும். அவர்களின் கல்வி வளர்ச்சிக்கான முன்னெடுப்புக்கள் எவ்வளவு தூரம் வெற்றியளித்துள்ளன என்பதும் ஆய்வு செய்யப்பட வேண்டியதாகவே உள்ளது. போராட்ட காலத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்கள் 2009 இல் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் படிப்படியாக தமது முன்னைய இருப்பிடங்களில் குடியேறிவருகின்றனர். அவ்வாறு அவர்கள் குடியேறிவருகின்றபோதிலும் அவர்களின் வாழ்க்கைத்தரம், கல்வி போன்றவற்றில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளன என்று கூறிவிட முடியாதுள்ளது. மீள்குடியேறியவர்களில் பெரும்பாலானவர்கள் மீன்பிடி, கூலித்தொழில், சிறு வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டுவருவதையே காணமுடிகின்றது. இந்நிலையில் அவர்களின் பொருளாதாரம் தாழ் நிலையிலேயே உள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் குடியேறியவர்கள் மத்தியிலும் இந்நிலைமையே பெரிதும் காணப்படுகின்றது. இவற்றால் அவர்கள் தங்கள் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகளைத் திருப்திகரமாக வடிவமைக்க முடியாதவர்களாக உள்ளனர் என்றே கூறலாம். எனவே, கிளிநொச்சிப் பிரதேச முஸ்லிம் பிள்ளைகளின் கற்றல் நிலைமை பற்றி நாச்சிக்குடா கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்ய வேண்டிய தேவை எழுகின்றது. கிளிநொச்சியில் நாச்சிக்குடா பிரதேசத்தில் மட்டுமே முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்றனர். அன்றியும் கிளநொச்சியில் அங்கு மட்டுமே முஸ்லிம் பாடசாலை ஒன்றும் உள்ளது. இதுவரை இந்தப் பிரதேசப் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டதாக அறியமுடியவில்லை. இந்நிலையில் மேற்படி விடயம் தொடர்பாக இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

**ஆய்வுக் குறிக்கோள்கள்**

கிளிநொச்சிப் மாவட்ட முஸ்லிம் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகள் எவ்வாறு உள்ளன என்பது பற்றி நாச்சிக்குடா கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்வதே இந்த ஆய்வின் பிரதான குறிக்கோளாக அமைகின்றது. கற்றல் நிலைமைகள் பற்றியும் அவற்றில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றியும் ஆய்வுசெய்யப்படுவதோடு கற்றல் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்படுகின்றன.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வானது அளவைநிலை ஆய்வாக (Survey research) முன்னெடுக்கப்படுகின்றது. ஒரு பிரச்சினையோடு தொடர்புடைய காரணிகளைக் கண்டறியவும் அவற்றிடையேயான தொடர்பின் தன்மைகளை விளங்கிக்கொள்ளவும் ஆய்வுப் புலத்தில் அளவைநிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகள் பற்றி நாச்சிக்கடா கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்வதற்கு இந்த ஆய்வுமுறையே பொருத்தமுடையதாக அமைகின்றது. இந்த ஆய்வுக்காகத் திரட்டப்படும் தகவல்கள் தரவுகளாக்கப்பட்டு பெரிதும் பண்பறிசார் அடிப்படையில் நோக்கப்படுகின்றன.

தகவல்கள் யாவும் கணினி மென்பொருட்களினூடாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள் மற்றும் வரைபுகள் மூலம் வியாக்கியானம் செய்யப்படுகின்றன.

- பெற்றோரின் பொருளாதார நிலைமை
- பெற்றோரின் அக்கறையும் ஈடுபாடும்
- பாடசாலையின் பௌதிக வளங்கள்
- பாடசாலைய ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தற் செயற்பாடு
- கல்வித் திணைக்களத்தின் அக்கறை
- சமூக நிறுவனங்களின் பங்களிப்பு
- மத நிறுவனங்களின் அக்கறை
- பிள்ளைகளின் கற்றல் ஈடுபாடு

ஆகிய காரணிகள் குறிப்பிட்ட பிள்ளைகளின் கற்றல் நிலைமைகளில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது இங்கு ஆய்வு செய்யப்படுகின்றது.

**தரவு சேகரிப்புக் கருவிகள்**

வினாக்கொத்து – பிள்ளைகளின் பெற்றோர்களுக்கானது, ஆசிரியர்களுக்கானது
நேர்காணல் - அரைக்கட்டமைப்பு
அவதானிப்புப் பத்திரம்
ஆகியன இங்கு தரவு சேகரிப்புக் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.
இவை தவிர நாச்சிக்குடா அ.மு.க.பாடசாலையின் க.பொ.த சாதாரணதரப் பெறுபேறு, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு, மாணவர் வரவு இடாப்பு ஆகியவற்றிலிருந்தும் தேவையான தரவுகள் பெறப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பிரதேசமும் மாதிரி எடுத்தலும்**
கிளிநொச்சிப் பிரதேசப் பாடசாலைகளில் கல்விபயிலும் முஸ்லிம் பிள்ளைகள் எண்ணிக்கையை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை 01

| இல | பாடசாலை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | நாச்சிக்குடா அ.மு.க.பாடசாலை | 125 |
| 02 | கிளிநொச்சி ம.வி. | 08 |
| 03 | இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா. | 07 |
| 04 | கோணாவில் அ.த.க.பாடசாலை | 01 |
| 05 | கனகபுரம் ம.வி. | 02 |
| 06 | அழகாபுரி அ.த.க.பாடசாலை | 02 |
| 07 | விவேகானந்த வித்தியாலயம் | 02 |
| 08 | இயக்கச்சி அ.த.க.பாடசாலை | 01 |
| 09 | பளை மத்திய கல்லூரி | 03 |
| 10 | கண்டாவளை ம.வி. | 03 |
| 11 | முழங்காவில் மத்திய கல்லூரி (தே.பா.) | 06 |
| 12 | கரிகாலை நாகபடுவான் இல:2அ.த.க.பா. | 04 |
| 13 | கரிகாலை நாகபடுவான் இல:3அ.த.க.பா. | 01 |
| 14 | முழங்காவில் றோ.க.த.க.பாடசாலை | 02 |
| 15 | கிளிநொச்சி மத்திய ஆரம்பப் பாடசாலை | 02 |
| | **மொத்தம்** | **169** |

(தகவல்: பிரதிக்கல்விப் பணிப்பாளர், திட்டமிடல், வலயக் கல்வி ஆலுவலகம், கிளிநொச்சி)

மேலுள்ள அட்டவணையின்படி நாச்சிக்குடா அ.மு.க.பாடசாலையிலேயே அதிக எண்ணிக்கையுடைய மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அவர்கள் அனைவரும் நாச்சிக்குடா கிராமத்தில் வாழ்பவர்கள். நாச்சிக்குடா (KN 77) கிராம சேவகர் பிரிவில் 217 முஸ்லிம் குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளபோதும் அங்கு 181 குடும்பங்கள் மட்டுமே வாழ்கின்றன. ஏனையோர் புத்தளம், மன்னார் போன்ற தாம் முன்னர் வாழ்ந்த பிரதேசங்களில் வாழ்கின்றனர்.

நாச்சிக்குடா அ.மு.க.பாடசாலையில் கல்வி பயில்கின்ற 125 பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களின் பெற்றோரில் 50 பேர் வகுப்பு ரீதியாக படையாக்கப்பட்டு எழுமாற்று அடிப்படையில் வினாக்கொத்து வழங்கி தகவல் பெறப்பட்டது. ஒரு பெற்றோரின் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் கற்கின்றபோது அவர்களிடம் ஒரு வினாக்கொத்து மட்டுமே வழங்கப்பட்டது.

ஆசிரியர்கள் பத்துப்பேர் எழுமாற்றாகத் தெரிவுசெய்யப்பட்டு வினாக்கொத்து வழங்கப்பட்டு தகவல் திரட்டப்பட்டது.


இவை தவிர பாடசாலை அதிபர், கல்வியதிகாரி, கோட்டக் கல்வியதிகாரி ஆகியோரிடமிருந்து நேர்காணல் மூலமும் தகவல்கள் பெறப்பட்டன.

**ஆய்வுப் பெறுபேறுகளும் வியாக்கியானமும்**

ஆய்வுக் கட்டுரையின் முக்கிய பகுதியாக இது அமைகின்றது. ஆய்வு மாதிரிகளிடமிருந்து பெறப்பட்ட தரவுகள் இங்கு பகுப்பாய்வு செய்யப்பட்டு அவை தொடர்பான வியாக்கியானங்களும் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

வினாக்கொத்து மூலம் பெற்றோரிமிருந்தும் (50 பேர்) ஆசிரியர்களிடமிருந்தும் (10 பேர்) தகவல்கள் திரட்டப்பட்டன. குறிப்பிட்ட பிரதேசத்தில் கற்றல் நிலைமை எவ்வாறு உள்ளது என்ற வினாவுக்கு பெரும்பாலானவர்கள் குறைவாக அல்லது மிகக் குறைவாக உள்ளது என்ற தெரிவையே வெளிப்படுத்தியிருந்தனர். இதனை வரைபு 1 காட்டுகின்றது.

வரைபு 1




சேவை வழங்குநர்களான ஆசிரியர்களும் சேவையின் பயனை எதிர்கொள்ளும் பங்குதாரர்களான பெற்றொரும் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகள் சாதகமாக இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளமையை அவதானிக்கலாம்.

பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் இத்தெரிவுகள் மட்டுமின்றி குறிப்பிட்ட பிரதேசப் பிள்ளைகள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் பெறுபேறுகளும் இதனை (அட்டவணை 2) உறுதிசெய்கின்றன.


அட்டவணை 2

| | சா.த | | | | தரம் 5 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **தமிழ்** | | **முஸ்லிம்** | | **தமிழ்** | | **முஸ்லிம்** | |
| **ஆண்டு** | **தேற்றி** | **சித்தி** | **தோற்றி** | **சித்தி** | **தோற்ற ி** | **100 மேல்** | **தோற்ற ி** | **100 மேல்** |
| 2014 | 18 | 2 | 11 | 1 | 24 | 3 | 18 | 1 |
| 2015 | 22 | 4 | 17 | 1 | 27 | 2 | 17 | 1 |

மேற்படி தரவுகளின்படி தோற்றியவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் சித்தியடைபவர்களின் எண்ணிக்கை அல்லது குறிப்பிட்ட இலக்கை எட்டுபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது என்பது கவனிக்கத்தக்கது. மேற்படி பாடசாலையிலும் பிரதேசத்திலும் 2009 போருக்குப் பின்னரான காலப்பகுதியில் எவரும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலைமைகள் மேற்படி பிரதேசத்திலும் பாடசாலையிலும் கற்றல் நிலைமைகள் தாழ் நிலையில் உள்ளன என்பதை உணர்த்துகின்றது. இந்நிலைமை முஸ்லிம் பிள்ளைகளை அதிகம் பாதிக்கின்றது என்பதை மேற்படி தரவுகளிலிருந்தும் அவதானிக்கலாம்.

மேற்படி நிலைமைக்குப் பெற்றோரின் பொருளாதார நிலைமையும் அப்பிரதேசப் பிள்ளைகளின் கற்றல் நிலைமையில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாக அமைந்துள்ளது. அப்பிரதேசத்தில் வாழ்கின்றவர்ககளில் பெரும்பாலானவர்கள் மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்கின்றனர். அதுவும் சிறியளவிலான மீன்பிடியையே மேற்கொள்கின்றனர். வேறு சிலர் கூலி வேலை, சிறு வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர். இவற்றால் அவர்களின் வாழ்வில் நிரந்தர வருமானம், போதுமான வருமானம் இல்லை. பெற்றோர்களின் வருமான அளவு பற்றி வரைபு 2 காட்டுகின்றது.

வரைபு 2





பெரும்பாலான குடும்பங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கைவிட அதிகமாக உள்ளனர். இதனால் அவர்களின் வருமானம் போதாதுள்ளது என்பதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.

அப்பிரதேசத்தில் வாழ்கின்ற முஸ்லிம்களில் நிரந்தர அரச உத்தியோகம் பார்ப்பவர்கள் மூவர் மட்டுமே உள்ளனர் என்பது அங்குள்ளவர்களுடனான கலந்துரையாடலின் மூலம் பெறப்பட்டது. சுயமாக அமைத்துக்கொண்ட தற்காலிக வீட்டில் அல்லது வீட்டுத்திட்டத்தின் மூலம் கிடைத்த சிறிய வீட்டில் வாழ்கின்றனர் அவற்றால் பிள்ளைகள் கற்பதற்கு வீட்டில் போதுமான

இடவசதியோ தளபாட வசதியோ இல்லை. பெற்றோரில் சிலர் பாடசாலையில் கல்வி பயலும் பிள்ளைகளை சிலவேளைகளில் தொழிலுக்கு உதவியாக அழைத்துச் செல்லுகின்ற சம்பவங்களும் நடைபெறுகின்றன. இவற்றால் அவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்ல முடியாதுள்ளனர். இந்நிலையில் அவர்களின் கல்வி பாதிப்படைவதையும் ஆசிரியர்களுடனான கலந்துரையாடலின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

நாச்சிக்குடா பிரதேசத்திலுள்ள பிள்ளைகளின் கல்வி தொடர்பாகப் பெற்றோர் காட்டுகின்ற அக்கறையும் ஈடுபாடும் எவ்வாறு உள்ளது என்பது தொடர்பாக ஆசிரியர்கள் வினாக்கொத்து மூலம் வெளிப்படுத்திய தகவல்களை வரைபு 3 மூலம் காணலாம்.

வரைபு 3





இவ்வாறு பெற்றோர் கல்வியில் காட்டுகின்ற அக்கறை குறைவாக இரப்பதற்கான காரணம் பற்றிக் ஆசிரியர்கள், அதிபர் ஆகியோருடன் கலந்துரையாடியபோது பின்வரும் காரணங்கள் அவர்களால் முன்வைக்கப்பட்டன.

- பெற்றோர் கல்வியறிவு குறைந்தவர்களாக இருக்கின்றமை
- குறிப்பிட்ட பிள்ளைகளின் உறவினர்களில் கல்விப் பின்புலமுடையவர்கள் குறைவாக உள்ளமை
- கற்றலுக்கு வசதியேற்படுத்திக் கொடுக்கக் முடியுமான அளவு வருமானமின்மை
- கற்றலுக்கான சந்தர்ப்பங்கள் குறைவாக உள்ளமை
- கல்வியின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு குறைந்தவர்களாக உள்ளமை
- நிரந்தர வாழ்விடத்தை விட்டு நீண்டகாலம் அலைந்து திரிந்தமையால் வாழ்க்கை பற்றி சரியான திட்டமிடலை மேற்கொள்ள முடியாது போனமை
- ஏனை சமூகப் பிள்ளைகளும் கல்வியில் காட்டுகின்ற அக்கறை குறைவாகவே உள்ளமை (அதனால் போட்டித் தன்மை குறைவாக உள்ளமை)

குறிப்பிட்ட பாடசாலையில் 194 ஆண் பிள்ளைகளும், 174 பெண் பிள்ளைகளுமாக 368 பேர் கல்வி கற்கின்றார்கள். அவர்களில் 69 ஆண் பிள்ளைகளும் 56 பெண் பிள்ளைகளுமாக 125 பேர் முஸ்லிம்களாக உள்ளனர்.

பிள்ளைகளின் கற்றலுக்குப் பௌதிக வளங்களின் போதுமான தன்மை பற்றிய வினாவுக்கு ஆசிரியர்கள், பெற்றோர் அளித்த விருப்பத் தெரிவுகள் பற்றி வரைபு 4 காட்டுகின்றது.

வரைபு 4




இந்நிலைமை பற்றி நோக்குகின்றபோது ஆசிரியர்கள் மட்டுமின்றி பெற்றோர்களும் பிள்ளைகளுக்கான கற்றல் வளங்கள் போதுமானவையாக இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளனர். அவரகளில் பெரும்பாலானவர்கள் வளங்கள் பற்றாக்குறையாக அல்லது மிகப் பற்றாக்குறையாக உள்ளதாக வெளிப்படுத்தியுள்ளமையையும் காணமுடிகின்றது. எவ்வாறான வளப்பற்றாக்குறை காணப்படுகின்றது என்பது தொடர்பாக அவதானிப்பு மற்றும் நேர்காணல் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டன.

- கட்டடங்கள்
- கற்றல் கற்பித்தலுக்கான தளபாடங்கள், உபகரங்கள்
- விளையாட்டு உபகரங்கள்
- கணினிகள்
- நூலகம்
- வழிபாட்டு இடங்கள்


போன்றவற்றில் அங்கு போதாமை காணப்படுவதாக தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது. இவை அங்குள்ள முஸ்லிம் பிள்ளைகளின் பாடவிதானச் செயற்பாடுகளில் மட்டுமின்றி இணைபடவிதானச் செயற்பாடுகளிலும் பாதிப்பினை உண்டாக்குகின்றன என்பதை ஆய்வுத் தரவுகள் மூலம் அறிய முடிகின்றது.

பிள்ளைகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் வகுப்பறைகளின் எண்ணிக்கை போதாதுள்ளது. ஆறு வகுப்பறைகள் தற்போதும் தகரக் கொட்டகைகளாக உள்ளன. இதனால் வெயில் அதிகமான காலத்தில் பிள்ளைகளும் ஆசிரியர்களும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விருப்போடு முன்னெடுப்பதில் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். அதாவது, சில வகுப்பறைகள் கற்றலுக்குப் பொருத்தமற்றவையாக உள்ளன. ஆதேபோல மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான அளவு தளபாடங்களும் போதுமானவையாக இல்லை என்பது அங்குள்ள அதிபர் மற்றம் ஆசிரியர்களிடமிருந்து திரட்டப்பட்ட தரவுகளிலிருந்து தெளிவாகின்றது. இவை அங்குள்ள முஸ்லிம் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகளைப் பாதிக்கின்றன. முஸ்லிம் பெண் பிள்ளைகள உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டுவது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. ஆண் பிள்ளைகள் விளையாட்டுக்களில் ஈடுபடுகின்ற போதிலும் அங்குள்ள பிள்ளைகளின் தேவைகளுக்குப் போதுமானவையாக உபகரங்கள் இல்லை. பாடசாலையில் மூன்று கணினிகள் மட்டுமே செயற்படு நிலையில் உள்ளன. அவை ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் போதுமானவையாக இல்லை. அது மட்டுமின்றி அவற்றைக் கற்றலுக்காகப் பயன்படுத்துவதும் குறைவாகவே காணப்படுகின்றது. நூலகம் பற்றி

நோக்குகின்றபோது பாடசாலையில் ஒரு சிறிய நூலகம் உள்ளது. அங்கு மிகக் குறைந்த நூல்களே உள்ளன. அவையும் மாணவர்களால் பயன்படுத்தப்படுவதாக இல்லை. அவை முறையான பதிவுகளுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதோடு பயன்படுத்தப்படுவது தொடர்பாக மாணவர்களிடம் எந்த விழிப்புணர்வும் இல்லை. இவற்றால் அங்குள்ள முஸ்லிம் பிள்ளைகள் உட்பட ஏனையவர்களும் சுய கற்றலில் ஈடுபடுவது மிகக் குறைவாகவே உள்ளது. முஸ்லிம் பிள்ளைகள் தொழுகையில், வழிபாட்டில் ஈடுபடுவதற்கான தனியிடங்கள் எவையும் ஒதுக்கப்படவில்லை. அதனால் பிள்ளைகள் தமது ஒழுக்க விழுமியங்களைக் கற்றுக்கொள்வதிலும் சமயக் கற்றலில் ஈடுபடுவதிலும் சவால்களை எதிர்கொள்கின்றனர். இவ்வாறு நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் பல நிலைகளில் வளப் பற்றாக்குறை காணப்படுவதோடு அது அப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகளிலும் பாதகமான போக்கைக் காண்பிக்கின்றன.

பாடசாலையிலுள்ள ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு பற்றி பெற்றோர்களிடமிருந்து திரட்டப்பட்ட தரவுகள் பற்றி வரைபு 5 காட்டுகின்றது.

வரைபு 5




ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தல் தொடர்பாக பெற்றோரிடம் ஓரளவு திருப்தி காணப்படுகின்றது. 70% ஆன பெற்றோர் திருப்தி அல்லது ஓரவு திருப்தி என்ற தெரிவையே வெளிப்படுத்தியுள்ளனர். எனினும், ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு மிகத் திருப்தியாக அமைகின்றபோதுதான் கற்றல் சிறப்புற நிகழும். இந்நிலைமைக்கான காணங்கள் பற்றி அதிபரோடு கலந்துரையாடியபோது, பாடசாலையில் ஆசிரியர்களின் எண்ணிக்கை போதுமானதாக உள்ளபோதும் சில பாடங்களுக்கான ஆசிரியர்கள் பற்றாக் குறையாக உள்ளதாகும் தெரிவித்தார். கணினி, விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கன.

அது மட்டுமின்றி, மேற்படி பாடசாலை ஒரு முஸ்லிம் பாடசாலையாக அமைகின்றபோதும் நீண்ட காலமாக அதன் அதிபர் தமிழ்ச் சமூகத்தைச் சார்ந்தவராக இருந்து வருகின்றார். தற்போதும் பணிநிறைவேற்று அதிபர் ஒருவரே கடமையிலுள்ளார். பாடசாலையில் நான்கு முஸ்லிம் ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். அவர்களில் ஒருவர் மட்டுமே நிரந்தர ஆசிரியர். இந்நிலைமைகளும் அங்குள்ள முஸ்லிம் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகளுக்கு வலுவான ஒத்துழைப்பை வழங்குவதாக இல்லை எனலாம். மேற்படி நாச்சிக்குடா பிரதேசத்தில் வாழுகின்ற முஸ்லிம் மக்களில் நிரந்தர ஆசிரியர் ஒருவர் மட்டுமே உள்ளார். முஸ்லிம் சமூகத்தில் வாழுகின்ற, அவர்களின் ஒழுக்க விழுமியங்களை முழுமையாக விளங்கிக் கொண்டவர்கள் அதிபராக, ஆசிரியராக் கடமையாற்றுகின்றபோது நாச்சிக்குடா பிரதேச பிள்ளைகளின் கற்றலை மேலும் உயர்நிலையில் பேண முடியும்.

நாச்சிக்குடா பிரதேசம் கிளிநொச்சி நகர் பிரதேசத்திலிருந்து அண்ணளவாக 60 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. அப்பிரதேசத்திலேயே நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையும் அமைந்துள்ளது. அதனால், ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்படி பாடசாலையைத் தரிசிக்கின்ற நிலைமை ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது. இதனை பாடசாலையிலுள்ள பதிவேடுகள் மூலம் அறிய முடிகின்றது. இந்நிலையில் கல்வித் திணைக்களத்தின் நேரடித் தரிசிப்பு போதாதுள்ளது என்பது உணரப்படுகின்றது. பாடசாலையில் ஒட்டுமொத்த அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கு இவர்களின் தரிசிப்பும், கல்வித் திணைக்களத்தின் பொருத்தமான வளப்பங்கீடும் பலமாக அமையும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நாச்சிக்குடா பாடசாலையிலிருந்து பெறப்பட்ட தரவுகளின்படி ஒப்பீட்டளவில் முஸ்லிம் பிள்ளைகளின் வரவில் ஒழுங்கீனம், தாமதமான வரவு என்பன அதிகமாக உள்ளன. மேற்படி பிரதேசத்தில் வாழுகின்ற முஸ்லிம் மக்கள் நீண்ட காலமாக புத்தளம், மன்னார் போன்ற இடங்களில் இடம்பெயர்ந்து வாழ்ந்தவர்கள் என்பதால் அங்குள்ளவர்களோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளனர். அப்பிரதேசங்களில் நடைபெறுகின்ற விழாக்கள், சடங்குகளுக்கு செல்லும்போது தமது பிள்ளைகளையும் அழைத்துச் செல்வதால் தொடர்ச்சியாகச் சில நாட்களுக்கு அவர்கள் பாடசாலைக்குச் சமுகமளிக்காது விடுகின்றனர். மீன்பிடித் தொழிலுக்கு பெற்றோர் சென்ற வருவதால் ஏற்படுகின்ற தாமதம், சில பிள்ளைகள் பெற்றோருக்கு தொழிலில் உதவி செய்வதற்காகச் செல்கின்றமை போன்ற காரணங்களாலும் பிள்ளைகளின் வரவில் தடை, தாமதம் ஏற்படுகின்றன. இவற்றால் அப்பிரதேச முஸ்லிம் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகின்றது. இவ்வாறு பிள்ளைகள் இழந்த கல்வியை ஈடுசெய்வதற்கான எந்தப் பரிகாரக் கற்பித்தல் (remedial teaching) பொறிமுறையும் பாடசாலையில் ஏற்படுத்தப்படவில்லை.

மேற்படி பாடசாலையில் 2016 தரவுகளின்படி ஆரம்பப் பிரிவில் எழுத, வாசிக்கத் தெரியாது உள்ள முஸ்லிம் பிள்ளைகளின் எண்ணிக்கை பற்றி அட்டவணை 3 காட்டுகின்றது.

அட்டவணை 3

| தரம் | முஸ்லிம் மாணவர் | எழுத, வாசிக்கத் தெரியாதோர் |
|---|---|---|
| 1 | 9 | 6 |
| 2 | 13 | 9 |
| 3 | 8 | 5 |
| 4 | 15 | 9 |
| 5 | 13 | 8 |


இந்த வகப்புக்களில் எழுத, வாசிக்கத் தெரியாதுள்ள பிள்ளைகள் தொடர்ச்சியாகத் தமது கற்றலில் பின்னடைவையே காட்டிவருகின்றனர்.

பாடசாலைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் தனியார் கல்வி நிறுவனங்களின் கற்றல் - கற்பித்தலும் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. நாச்சிக்குடா பிரதேசத்தில் எந்த தனியார் கல்வி நிலையங்களும் இல்லை. அப்பிரதேசத்தில் பிரத்தியேக வகுப்புக்களை நடத்தக்கூடிய முஸ்லிம் ஆசிரியர்களும் இல்லை. இந்நிலையில் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட 50 பெற்றோரில் 46 பேர் தமது பிள்ளைகளைத் தனியார் வகுப்புக்களுக்கு அனுப்புவதில்லை எனத் தெரிவித்திருந்தனர். தரம் 10, 11 கற்கின்ற பிள்ளைகளை அயற்கிராமமான முழங்காவில் பிரதேசத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்களுக்கு 4 பெற்றோர் அனுப்புகின்றனர். தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பாமைக்கான காரணம் பற்றி வினவியபோது பின்வரும் விடயங்கள் அறியப்பட்டன.

- போதிய வருமானம் இன்மை
- தனியார் கல்வி நிறுவனம் தொலைவில் உள்ளமை
- கல்வி தொடர்பான பெற்றோரின் விழிப்புணர்வு போதாமை

பிள்ளைகள் வீட்டில் கற்பது தொடர்பாக பெற்றோர் வெளிப்படுத்திய விருப்பினை வரைபு 6 காட்டுகின்றது.

வரைபு 6




வீட்டில் பிள்ளைகள் சுய கற்றலில் ஈடுபடுவது அவர்களின் கற்றல் அடைவை அதிகரிக்கும் முக்கிய விடயமாகும். கற்றல் அதிகமாக இருக்க வேண்டும். ஆனால், இங்கு பெறப்பட்ட தரவுகளின்படி 70% ஆனவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவது போதாது என்பதை வெளிப்படுத்துகின்றது. அவர்களது கற்றலுக்கு உதவக்கூடியவர்களாக பெற்றோர்களின் கல்விநிலை இல்லாதபோதும் அவர்கள் கற்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஆவது பெற்றோர் அக்கறையெடுக்கவேண்டியவர்களாக உள்ளனர். ஆனால், அவர்கள் எடுக்கின்ற அக்கறை போதாதுள்ளது என்பதை ஆசிரியர்களுடனான நேர்காணல்கள் உறுதிப்படுத்துகின்றன.

**ஆய்வு முடிவுகள்**

- நாச்சிக்குடா பிரதேச முஸ்லிம் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகள் தாழ்நிலையில் உள்ளன.
- அவர்களது கற்றல் நிலைமைகளில் பாடசாலை, பெற்றோர், கல்வித் திணைக்களம், சமூக நிறுவங்கள் சார்ந்த பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.
- இப்பிள்ளைகளின் பெற்றோர் கல்வியறிவு குறைந்தவர்களாகவும் பொருளாதார வசதி குன்றியவர்களாகவும் கல்வி பற்றிய விழிப்புணர்வு போதாதவர்களாவும் உள்ளமை அப்பிரதேசப் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகளில் பாதகமாக நிலைமைகளை உருவாக்கியுள்ளன.
- இப்பிரதேச ஆரம்பப் பிரிவுப் பிள்ளைகளில் 50% இற்கு மேற்பட்டவர்கள் எழுத, வாசிக்கத் தெரியாதவர்களாக உள்ளனர்.
- இப்பிரதேச முஸ்லிம் பிள்ளைகளின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு, க.பொ.த. சாதாரணதரப் பெறுபேறு ஆகியன மிகத் தாழ்நிலையில் உள்ளன.
- நாச்சிக்குடா பிரதேச முஸ்லிம் பிள்ளைகளில் மிக அதிகமானவர்கள் பயிலும் நாச்சிக்குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் காணப்படுகின்ற பௌதிக, ஆசிரிய வளப் பற்றாக்குறை அவர்களின் கற்றல் நிலைமைகளில் பாதகத் தன்மையை ஏற்படுத்துகின்றன.

- இப்பிரதேச முஸ்லிம் பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்வது, தாமதமின்றிச் செல்வது ஆகிய விடயங்களில் பின்னடைவாக உள்ளனர்.
- இப்பிள்ளைகளின் இழந்த கல்வியை ஈடுசெய்வதற்கான எந்தப் பொறிமுறையும் பாடசாலைகளில் ஏற்படுத்தப்படவில்லை.
- இப்பிரசேப் பிள்ளைகளின் கற்றலுக்காக கல்வித் திணைக்களம் மேலும் வினைத்திறனான செயற்பாடு போதாதுள்ளது.
- பெற்றோர் பிள்ளைகளின் கற்றலுக்கு வழங்குகின்ற ஒத்துழைப்பு போதாதுள்ளது.
- பிள்ளைகள் சுய கற்றலில் ஈடுபடுவதும் பெற்றோர்கள் அதை வழிப்படுத்துவதும் போதாதுள்ளன.

**விதப்புரைகள்**

- அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் இப்பிரதேச முஸ்லிம் மக்களின் வழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான ஏற்பாடுகளை விரைந்து செயற்படுத்த வேண்டும்.
- வீடுகளில் கற்பதற்கான சூழல் ஏற்படத்தப்பட வேண்டும்.
- கல்வியின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு பெற்றோரிடமும் பிள்ளைகளிடமும் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- பாடசாலைகள் வளங்களை ஒருங்கிணைத்து இப்பிரதேச முஸ்லிம் பிள்ளைகளின் கற்றலுக்குப் பயன்படுத்தவேண்டும்.
- பொருத்தமான ஆசிரிய வளம் ஒழுங்கமைகப்பட வேண்டும்.
- முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.
- பிள்ளைகள் இழந்த கல்வியை ஈடுசெய்வதற்கான பரிகாரக் கற்பித்தல் நடவடிக்கைகளைப் பாடசாலைகள் வினைத்திறனோடு நடைமுறைப்படுத்த வேண்டும்.
- பெற்றோர்கள் பிள்ளைகளை தாமதமின்றியும் ஒழுங்காகவும் பாடசாலைகளுக்க அனுப்புவதில் மேலும் அக்கறை காட்ட வேண்டும்.

**முடிவுரை**

கிளிநொச்சிப் பிரதேசத்தில் முஸலிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாகிய நாச்சிக்குடாவில் கல்வி பயிலும் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகள் தாழ்நிலையில் உள்ளன. அதற்கு பல்வேறு காரணிகள் தடைகாளக அமைகின்றன. இத்தடைகள் வெற்றி கொள்ளப்பட்டு பிள்ளைகளின் கற்றல் நிலைமைகள் மேம்படுதப்படுவது அவசிமானதாகும். இதற்கு பெற்றோர், ஆசிரியர்கள், சமூகப் பெரியோர்கள் அனைவரும் அக்கறையோடு செயற்படவேண்டிய தேவை காணப்படுகின்றது. கூட்டாக இணைந்து, விரைந்து செயற்படுவதன் மூலம் இப்பிள்ளைகளின் கற்றல் நிலைமைகளை வளப்படுத்தி ஆரோக்கிய எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

**உசாத்துணைப் பட்டியல்**


கருணாநிதி, மா. (2008). கல்விச் சமூகவியல். கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

சந்திரசேகரம், சோ. (2008). சமகாலக் கல்வி முறைகளின் சில பரிமாணங்கள். கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

சந்திரசேகரம், சோ. (2009). சமகாலக் கல்வி முறைகள் ஒரு விரிநிலை நோக்கு. கொழும்பு: சேமமடு பதிப்பகம்.

சின்னத்தம்பி, மா. (2005). பாடசாலைக் கல்வி ஆற்றலும் சமூக நீதியும். கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

சின்னத்தம்பி, மா. (2013). சமுதாயத்துக்கான கல்வி. யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிறின்டேர்ஸ்

பக்கீர் ஜஃபார், ப.கா. (2009). மாணவர்களின் வகுப்பறை நடத்தை. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

ஜெயராசா, சபா & சந்திரசேகரம், சோ. (2009). கல்வியியலும் நிகழ்காலப் பதிவுகளும். கொழும்பு: சேமமடு பதிப்பகம்.